## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

### கலை மற்றும் பண்பாடு
### அருங்காட்சியகங்கள்
### தொல்லியல்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015–2016

### மானியக் கோரிக்கை எண்.29


**கே.சி.வீரமணி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

| வ. எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | கலை மற்றும் பண்பாடு | 1–59 |
| 2. | அருங்காட்சியகங்கள் | 60–77 |
| 3. | தொல்லியல் | 78–102 |

# கலை பண்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015–2016

**முன்னுரை**

**1.** கலையும் பண்பாடும் ஓர் இனத்தின் வாழ்வோடும், கலாச்சாரத்தோடும், வளர்ச்சியோடும் இணைந்ததோடு மட்டுமல்லாமல், மனிதனை மனிதநேயம் உள்ளவனாக அடையாளம் காணுவதற்கு இன்றியமையாத காரணிகளாக அமைந்துள்ளன. கலை வாழ்வைச் செம்மையாக்குகிறது; இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகியவை நமது வாழ்வில் முழுமையான மகிழ்ச்சியைத் தருகிறது. நாகரீகத்தின் மென்மையான வளர்ச்சியினை கலையும், பண்பாடும் வெளிப்படுத்துகின்றன. கலை மனிதகுலத்தின் பெருமையினை சித்தரிக்கின்றது. நமது பாரம்பரியம்,

தொன்மை மற்றும் பண்பாடு குறித்த தாக்கத்தினை ஏற்படுத்த கலை ஒரு ஒப்பற்ற ஊடகமாக திகழ்கிறது.

இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்திடவும், பாரம்பரியப் பண்பாட்டை வெளிப்படுத்தும் மரபு கலைகளை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் பொருட்டு, பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் செயல்பட்ட, கலைக் கல்வி நிறுவனங்கள், கலை அமைப்புகளை ஒரு குடையின்கீழ் கொணர்ந்து கலை பண்பாட்டுத் துறை என்ற தனித்துறை டிசம்பர் திங்கள் **1991**ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

## துறையின் நோக்கம்

**1.1** கலைகளை வளர்க்கும் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்கப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், அழிந்து வரும் செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைகளைப் போற்றி பேணிப் பாதுகாத்தல், அனைத்து கலைகளையும், கலை

விழாக்கள் மூலமாக மக்களிடையே கொண்டு செல்லுதல், இசைக்கல்வி மற்றும் நுண்கலைக் கல்வியை அடுத்த சந்ததியினருக்கு கொண்டு செல்லுதல், அழிந்து வரும் பல்வேறு கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல், நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி செய்வதன் மூலம் கலைஞர்களையும், கலைகளையும் பாதுகாத்தல் ஆகியவற்றை கலை பண்பாட்டுத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## துறையின் செயல்பாடுகள்

**1.2** தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளைப் பேணிப் பாதுகாத்தல், வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், பாரம்பரியக் கலைகளை இளைய சமுதாயத்தினருக்கு கொண்டு செல்லுதல் மற்றும் கலைப்பயிற்சி அளித்தல், பொதுமக்களிடையே அக்கலைகளைப் பற்றிய விழப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள், ஓவியம், சிற்பம் முதலான கலைகளை கவின்கலைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகழ்த்துக்

கலைக் கல்வி நிறுவனங்கள் மூலம் பயிற்றுவித்தல், தமிழகத்தின் பண்பாட்டு கலைகளை வெளி மாநிலத்தவரும், வெளிநாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல், கலைஞர்களுக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் விருதுகள் வழங்குதல், நலிவுற்ற நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், கலைஞர்களை ஊக்குவித்து அவர்களது வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதிலும், அழிந்துவரும் கலை வடிவங்களை மீட்டுருவாக்குவதிலும், தமிழ் இசையினையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நமது மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சேர்த்தல் ஆகிய கலைப் பணிகளை கலை பண்பாட்டுத்துறை முனைப்புடன் செய்து வருகின்றது.

**1.3** தமிழகம் முழுவதும் கலைப்பணிகளை மேற்கொள்ள ஆறு மண்டலக் கலை பண்பாட்டு மையங்களும், இளைய தலைமுறையினர் இசைக் கல்வியை கற்றுணர நான்கு அரசு இசைக் கல்லூரிகள், பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி மற்றும்

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகமும், ஓவியர்களையும், சிற்பிகளையும், கலை வல்லுநர்களையும் உருவாக்கிட இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், ஒரு அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியும், இளம் சிறார்களிடையே கலைகளை கொண்டு செல்ல நாற்பது ஜவகர் சிறுவர் மன்ற மையங்களும், மாவட்டங்களில் கலை விருதுகள் வழங்கிடவும், கலை விழாக்களை நடத்திடவும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் கலை மன்றங்களும், ஓவியர்களையும், சிற்பிகளையும் சிறப்பிக்க தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழுவும், தொன்மை வாய்ந்த கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், கலைஞர்களை ஊக்கப்படுத்திடவும், கலை விழாக்களை நடத்திடவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும், நாட்டுப்புறக் கலைஞர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்திட தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியமும் செயல்பட்டு வருகின்றன. கலை பண்பாட்டுத்துறை ஆணையரை தலைவராகக் கொண்டு செயல்படும் இத்துறையில் பணிகளை ஒருங்கிணைத்திட ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஆறு

மண்டல உதவி இயக்குநர்கள், ஒரு கணக்கு அலுவலர், ஒரு செயல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் ஆணையருக்கு உதவியாக பணியாற்றி வருகின்றனர்.

## மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

**1.4** மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு இடங்களில் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

**1.5** கலைப்பணிகளை ஒருங்கிணைக்கவும், அரசின் கலைத்திட்டங்களை மாவட்டங்களில் செயல்படுத்தவும், தொன்மையான கலைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்லவும், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இம்மையங்களின் வாயிலாக மாவட்டங்களில், கலை விழாக்கள் நடத்துதல், கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், செவ்வியல் கலைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், கலைப்போட்டிகள் நடத்துதல், அழிந்து வரும் கலைகளில் இளைய

தலைமுறையினருக்கு கலைப்பயிற்சி அளித்தல், ஓவிய, சிற்ப பயிற்சி மற்றும் கண்காட்சி நடத்துதல், மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், ஜவகர் சிறுவர் மன்றங்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, மாவட்ட அளவில் அரசின் திட்டங்களை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் செயல்படுத்தி வருகின்றன. மேலும், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்தின் சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு தமிழிசை விழா, கார்த்திகை ஒளி விழா, வைகுண்ட ஏகாதசி விழா, பாவை விழா, சாரல் விழா, சீர்காழி மூவர் விழா, கட்டபொம்மன் பிறந்தநாள் விழா, அருவித் திருவிழா, குமரித் திருவிழா, சதயவிழா, ஆழித்தேர் விழா, கோடை விழா, ஆடிப் பெருக்குவிழா, மத நல்லிணக்க விழா போன்ற பல்வேறு கலை விழாக்களை நடத்தி வருகின்றன.

**1.6** சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் ரூ.107.81 இலட்சம்

செலவிலும், திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் ரூ.**113.15** இலட்சம் செலவிலும் பொதுப்பணித்துறையால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## மாவட்டக் கலை மன்றங்கள்

**1.7** ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் மாவட்டக் கலை மன்றங்கள், பாரம்பரியமும், தொன்மையும், சிறப்புமிக்க தமிழகக் கலை வடிவங்களை போற்றிப் பேணிப்பாதுகாத்தல், மாவட்டஅளவில் கலைத் திறமையுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து விருதுகள் வழங்குதல் மற்றும் கலைஞர்களின் கலைத் திறமையினை வெளிக்கொணர வாய்ப்புகள் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

**1.8** ஐந்து தலைசிறந்த கலைஞர்களுக்கு, மாவட்டந்தோறும் அவர்களது வயதிற்கும், கலைத் திறமைக்கும் ஏற்றவாறு கலை விருதுகள் வழங்கும் திட்டத்தினை **2002–2003** ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது:–

| | | |
|---|---|---|
| 18 வயதிற்குள் | – | கலை இளமணி விருது |
| 19 முதல் 35 வயதிற்குள் | – | கலை வளர்மணி விருது |
| 36 வயது முதல் 50 வயதிற்குள் | – | கலைச்சுடர்மணி விருது |
| 51 வயது முதல் 60 வயதிற்குள் | – | கலை நன்மணி விருது |
| 60 வயதிற்கு மேல் | – | கலை முதுமணி விருது |

1.9 கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக, மாவட்டந்தோறும் கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் 2002–2003 ஆம் ஆண்டு முதல் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் வழங்கப்படும் அடையாள அட்டைகள் வாயிலாக அரசின் நிதியுதவி பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுவதற்கு கலைஞர்களுக்கு உதவியாக இருக்கின்றன.

## தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

**1.10** தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைகளை பாதுகாக்கவும், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும், அக்கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நோக்கத்திற்காகவும் **தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்** உருவாக்கப்பட்டது. நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் இதுவரை **31,145** கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். அவர்களில் **7,115** கலைஞர்களுக்கு ரூ.**1,18,58,612/-** மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## கலைக்கல்வி நிறுவனங்கள்

## இசைக்கல்வி நிறுவனங்கள்

**1.11** இசை என்பது மனிதனின் உள்ளத்திற்கு அமைதியையும், இன்பத்தையும் மூளைக்கு சுறுசுறுப்பையும், உடலுக்கு உறுதியான

ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. தொன்மையான தமிழிசை நமது பண்பாட்டினையும், பாரம்பரியத்தினையும் பிரதிபலிக்கிறது. திறன்படைத்த இளம் கலைஞர்களை புகழ்மிக்க இசைவல்லுநர்களாக உருவாக்கிடவும், இளைய தலைமுறையினருக்கு இசைக்கல்வியினை எடுத்துச் செல்லவும், தொன்மையான இசையினை மாநிலம் முழுவதும் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் எடுத்துக் செல்லும் நோக்கில், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம், இசைக் கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்

**1.12** இசையின் சிறப்புகளையும், கவின்கலைகளின் சிறப்புகளையும் அகில இந்திய அளவிலும், உலக அளவிலும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்திலும், அவர்களுக்கு இசையின், ஓவியத்தின், சிற்பத்தின் மகத்துவத்தை

எடுத்துரைக்க வேண்டும் என்பதின் அடிப்படையிலும், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தும் பொருட்டு, **2013** ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை விதி **110–**இன் கீழ், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சட்டமன்றத்தில் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழக சட்டம்**–2013** (Tamil Nadu Music and Fine Arts University Act-2013) இயற்றப்பட்டு, **14.11.2013** முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வரை வேந்தராகக் கொண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது, தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் தற்காலிகமாக, சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. கலைமாமணி திருமதி.வீணை ஈ.காயத்ரி, தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக நியமனம் செய்யப்பட்டார். இப்பல்கலைக் கழகத்திற்கு நிர்வாகப் பணிகள் மேற்கொள்ள பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடங்கள்

தோற்றுவிக்கப்பட்டு, அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**1.13** **2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், குழலிசை, நாதஸ்வரம் ஆகிய பிரிவுகளில் முதுகலை பட்டப்படிப்புகளும், டிஜிட்டல் போட்டோகிராபி மற்றும் காட்சி வழித் தொடர்புதுறையில் முதுகலை பட்டயப் படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன.

**1.14** துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய இடங்களில் செயல்படும் அரசு இசைக்கல்லூரிகளும், சென்னை மற்றும் கும்பகோணத்தில் செயல்படும் அரசு கவின் கலைக் கல்லூரிகளும், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய **8** கல்லூரிகளும் இப்பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

**1.15** பல்கலைக் கழகம் சிறப்புடன் செயல்பட அரசால் ஆட்சிமன்றக் குழு (சிண்டிகேட்), பாடத்திட்டக்குழு, கல்விக்குழு, நிதிக்குழு அமைக்கப்பட்டதன் வாயிலாக, பல்கலைக் கழகத்தினை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லும் வகையில் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கொள்கை முடிவுகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழகத்தில் புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக் கழகம் செயல்பட தமிழக அரசால் 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.1.05 கோடி நிதி நல்கையாக அளிக்கப்பட்டுள்ளது.

**1.16** அரசாணை (நிலை) எண்.194, வருவாய்த்துறை, நாள்.9.6.2014–ன் வாயிலாக, காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் கிராமத்தில் 12.72.0 ஹெக்டேர் நிலம் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறைக்கு நில மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிலம் தமிழ்நாடு

இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள திறந்தவெளி கலையரங்கில் **23.2.2015,24.2.2015** மற்றும் **25.2.2015** ஆகிய மூன்று நாட்கள் இளைய தலைமுறையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்லூரிகளுக்கு இடையேயான கலைப்போட்டிகள், நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள், கர்நாடக சங்கீதம் என்ற மூன்று வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## அரசு இசைக் கல்லூரி, சென்னை

1.17 புராதனக் கட்டடமான **"பிராடிகேசில்"** கட்டடத்தில் சென்னை அரசு இசைக்கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சீரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், குரலிசையில் (முதுகலை – இசைக் கலைமணி) ஈராண்டு முதுநிலை பட்டயப் படிப்பும்,

நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.18** **2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் சென்னை அரசு இசைக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பும், இல்லத்தரசிகளும், கூடுதல் பட்டம் பெற விரும்பும் மாணவர்களுக்கென மாலை நேரத்திலும், வார இறுதி நாட்களிலும் குரலிசை, வீணை, ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன.

**1.19** சென்னை அரசு இசைக்கல்லூரியில் வயலின், கீபோர்டு ஆகிய கலைப்புலங்களில் நவீன பயிற்சியினை அறிமுகப்படுத்திட ரூ.**10.00** இலட்சம் செலவினத்தில் எலக்ட்ரானிக் இசைக்கருவிகள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டுள்ளன.

**1.20** சென்னை அரசு இசைக் கல்லூரியில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் ரெக்கார்டிங்

ஸ்டுடியோ ரூ.13.00 இலட்சம் செலவில் பொதுப் பணித்துறையால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

1.21 சென்னை அரசு இசைக் கல்லூரியில் ரூ.2.00 இலட்சம் செலவில் ஒளி, ஒலி நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

## அரசு இசைக் கல்லூரி, மதுரை

1.22 மதுரை, பசுமலையில் அழகிய மலைச்சாரலில் அமைந்துள்ள மதுரை அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

1.23 2014–2015 ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை பாடப்பிரிவில் இளங்கலை பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

## அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

**1.24** கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.25 2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன.

**1.26** கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரிக்கு, கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம் பட்டியில் ரூ.**189.72** இலட்சத்தில், தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் கூடிய புதிய கட்டடம் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் புதிய கட்டடத்தில் இசைக்கல்லூரி செயல்படவுள்ளது.

## அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

**1.27** இசைக்கு பெருமை சேர்க்கும் திருவையாறில், அரசு இசைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், குரலிசையில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பும், இரண்டாண்டு முதுகலை பட்ட மேற்படிப்பு மற்றும் முனைவர் பட்ட ஆய்வு ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.28** திருவையாறு அரசு இசைக்கல்லூரியில் வயலின், கீபோர்டு ஆகிய கலைப்புலங்களில் நவீன பயிற்சியினை அறிமுகப்படுத்திட ரூ.10.00 இலட்சம் செலவினத்தில் எலக்ட்ரானிக் இசைக்கருவிகள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு வாங்கப்பட்டுள்ளன.

**1.29** சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய நான்கு இசைக்கல்லூரிகளில், ரூ.15.00 இலட்சம் செலவினத்தில், பயன்பாட்டில் உள்ள இசைக்கருவிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள்

சரிசெய்யப்பட்டும், புதிய இசைக்கருவிகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**1.30** சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய நான்கு இசைக்கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு படிப்புதவித் தொகையாக மாதம் ரூ.500/–வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

## மாலைநேர இசைக்கல்லூரி மையங்கள்

**1.31** சென்னை மற்றும் மதுரையில் மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, தியாகராய நகரில் செயல்படும் மாலை நேர இசைக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின் ஆகியவற்றிலும், சென்னை, அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிலும், மதுரை மாலை நேர இசைக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்

**1.32** இசையில் ஆர்வம் மிக்க இளவயதினரை ஊக்குவித்து, அவர்களது இசை ஆர்வத்தினை தூண்டும் வகையிலும், இசைக்கல்வியை தமிழகமெங்கும் பரவலாக்கும் பொருட்டு, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இசைப்பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய ஏழு கலைகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.33** பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, படிப்புதவித் தொகையாக மாதம் ரூ.400/–வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

## கவின்கலை மற்றும் கட்டடக்கலை கல்வி நிறுவனங்கள்

**1.34** கலைகள் இறுகிய மனதை தளர்த்தி கடுமையான பணிகளுக்கிடையில் நமக்கு புத்துணர்வை அளிக்கிறது. மேலும், இயற்கையைப் போல தோற்றமளிப்பதுடன், மானிடச் சமுதாயத்தின் நுட்பமான உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. தமிழகத்தின் ஓவியங்களும், சிற்பங்களும் நமது தொன்மைமிக்க சிறந்த கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கின்றன. கவின்கலை மற்றும் கட்டடக்கலை கல்வி நிறுவனங்கள் புகழ்பெற்ற ஓவியர்களையும், சிற்பிகளையும் உருவாக்கி தங்களுக்கென வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர்.

## அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

**1.35** புராதனக் கட்டடத்தில் செயல்படும், சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு (Industrial

Design in Textile), காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்பும், வண்ணக்கலை, காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு , சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு மற்றும் சிற்பக்கலை ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.36** சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியின், வண்ணக்கலைப் பிரிவில், நவீன பயிற்சி முறையினை செயல்படுத்தும் பொருட்டு, வண்ணம் தீட்டுதலில் அனிமேஷன் தொழில்நுட்பங்களை கற்பிப்பதற்கு ரூ.15.00 இலட்சம் செலவில் மென்பொருட்கள் (software), கணினிகள் (Server, Mac Pro Computer), தளவாடங்களை கொள்முதல் செய்து மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு வாங்கப்பட்டுள்ளன.

## அரசு கவின் கலைக்கல்லூரி, கும்பகோணம்

**1.37** கோவில் நகரான கும்பகோணத்தில் செயல்படும் அரசு கவின் கலைக் கல்லூரியில், காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலை பட்டப்படிப்புகளும், இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.38** கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்கு ரூ.**4.00** இலட்சம் செலவில் வரைபடத் தாங்கிகள், சிற்பம் செய்வதற்கான அடிப்படைப் பலகைகள், களிமண் சிற்பங்கள் நிறுவத் தேவையான நிறுத்திகள் வாங்கப்பட்டுள்ளன.

## அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

**1.39** இந்திய சிற்பக் கட்டடக்கலையின் அருங்காட்சியமாகத் திகழும் மாமல்லபுரம், சிற்ப

வரலாற்றில் முக்கிய இடத்தினை வகிக்கிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க மாமல்லபுரத்தில், அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மரபு கட்டடக் கலையில் பி.டெக்., (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக்கலையில் பி.எப்.ஏ. (B.F.A in Traditional Sculpture) மற்றும் மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலையில் பி.எப்.ஏ. (B.F.A in Traditional Drawing and Painting) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**1.40** மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில், நான்காமாண்டு பயிலும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் விதமாக மரபு கட்டடக்கலை பிரிவு மாணவர்களுக்கு ரூ.1.00 இலட்சம் செலவில் கணினியில் Auto Cad பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**1.41** மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் ரூ.7.75 இலட்சம் செலவில்

கலையரங்கம் ஏற்படுத்திட பொதுப்பணித்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கலைக் காவிரி நுண்கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**1.42** திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசின் நிதியுதவி பெறும் கல்லூரியாகும். இக்கல்லூரி கல்வித்துறையின் மூலம் நிதியுதவியும், கலை பண்பாட்டுத் துறையின் கீழ் நிர்வாகமும் என செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் நுண்கலைகளை வளர்க்கும் விதத்தில், பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு பட்டப் படிப்புகளும், மூன்றாண்டு இளநுண்கலைப் பட்டப் படிப்புகளும், இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகளும், முனைவர் பட்ட ஆய்வும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

**1.43** இந்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களையும், திட்டங்களையும்

மாநில அளவில் செயல்படுத்திடவும், தொன்மைவாய்ந்த தமிழகக் கலைகளையும் போற்றிப் பாதுகாக்கவும் வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில், தமிழக அரசால் **1955** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், முத்தமிழான இயல், இசை, நாடகத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில், **1973** ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழக அரசால் வழங்கப்படும் நல்கையின் மூலம் கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், தமிழக பராம்பரிய கலைகளை இந்தியா மட்டுமல்லாமல் உலகளவில் எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்தி வருகின்றது.

## தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணித் திட்டங்கள்

**1.44** தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் நோக்கங்களை செயல்படுத்தும் விதத்தில், மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம்

செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்து, அதன் மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும், ஊக்கமும் அளித்தல், கலைத்துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்கு சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்கு ‘கலைமாமணி’ என்ற மாநில விருது வழங்குதல் மற்றும் "பாரதியார்", ″திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி", "திருமதி பாலசரசுவதி″ ஆகியோர் பெயரில் அகில இந்திய அளவிலான விருதுகள் வழங்கி சிறப்பு செய்தல், தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல், நாட்டிய–நாடகம் தயாரித்திடும் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நிதியுதவி வழங்குதல், கலைமேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும்

தன்னார்வ கலை நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் நிதியுதவி வழங்குதல், இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பயன்பெறும் நோக்கில் கலைவிழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலையம்சங்களை இளைய தலைமுறையினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழி கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய கலைப்பணித் திட்டங்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

**1.45** வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாக் கொண்டு அகவை முதிர்ந்து, நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.1,000/–ஆக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி **1.4.2013** முதல்

ரூ.1,500/—ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 12563 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நிதியுதவி பெற்று வருகின்றனர். நலிந்த கலைஞர் நிதியுதவிக்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.12,000/—த்திலிருந்து ரூ.60,000/—ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்.

**1.46** கலைஞர்களின் மறைவினால், தவிக்கும் குடும்பங்களுக்கு, குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை மொத்தம் 414 மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு ரூ.18.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**1.47** மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு, வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு தொகை (ஒரு முறை மட்டும்) ரூ.6,000/—த்திலிருந்து

ரூ.10,000/– ஆக உயர்த்திட ரூ.9.26 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்

**1.48** தமிழ் பண்பாட்டு மரபினை பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ளவும், இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை மேம்படுத்தவும், மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சங்கீத நாடக அகாதெமியுடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்திற்கு 82 வெளி மாநிலக் கலைக்குழுக்கள் வருகை புரிந்துள்ளனர். 85 தமிழகக் கலைக்குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வந்துள்ளனர்.

## வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்

**1.49** தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரவி இருக்கின்ற காரணத்தினாலும், நமது தமிழ்

பண்பாட்டினையும், கலைகளையும் வெளிநாடுகளில் உள்ள மக்கள் அறிந்து கொள்ளவும், வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையிலும், அந்நாடுகளில் நடைபெறும் கலை கலாச்சார விழாக்களில், தமிழகத்தின் பெருமைகளை, கலைகளின் வாயிலாக வெளிப்படுத்திட தமிழ் மண்ணின் பாரம்பரிய கலைகளான பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள், இசை நிகழ்ச்சிகள் ஆகிய கலைநிகழ்ச்சிகள் வெளிநாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், 20 கலைஞர்களைக் கொண்ட தமிழகக் கலைக்குழு, ஆஸ்திரேலியா நாட்டில் சிட்னி நகரிலும் அடிலெய்டு நகரிலும் மெல்போர்ன் நகரிலும் மற்றும் தாய்லாந்திலும் தமிழ்க் கலைகளை கலை நிகழ்ச்சிகளாக நடத்தியுள்ளனர்.

## திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

**1.50** இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைத்துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை ஊக்குவிக்கவும், தமிழகத்தில்

புகழ்பெற்ற தன்னார்வக் கலை நிறுவனங்கள் வாயிலாக கலைத்துறையை பொறுத்து ரூ.2000/– முதல் ரூ.5000/– வரை கலை நிகழ்ச்சிகள் நடத்திட தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 1941 இளங்கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## கிராமியக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

**1.51** கிராமியக் கலைஞர்களையும், கலைக் குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆணிகலன்கள் வாங்க இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் / ஆடை அணிகலன் வாங்கிட வழங்கப்படும் நிதியுதவித் தொகை ரூ.750/–லிருந்து ரூ.2,000/–ஆகவும், கலைக்குழுக்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.2,500/–லிருந்து ரூ.6,000/–ஆகவும்

உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 1437 கலைஞர்களுக்கும்/ கலைக்குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## புதிய நாடகங்கள் / நாட்டிய–நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

1.52 தமிழ்க்கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள், நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட நாடகக் குழுக்களுக்கு மன்றத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

1.53 நலிந்து வரும் நாடகக் கலையையும், நாடகக் கலைஞர்களையும் ஊக்குவித்திடவும், தமிழ் பண்பாடு, தமிழ் இலக்கிய காட்சிகளை மையக் கருத்தாகக் கொண்டு வரலாறு, புராண நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட ஒரு நாடகத்திற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் 5 நாடகங்களை நடத்திட ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டதின் அடிப்படையில், ஐந்து நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு, 8.3.2015 முதல் 12.3.2015 வரை சென்னை நாரதகான சபா கலையரங்கில்

மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 47 நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளது.

1.54 வளரும் சமுதாயத்தினர் தமிழர்களின் பண்டைய நாட்டிய கலைத்திறனை கண்டுணரவும், நாட்டியக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், தமிழ் இலக்கியம் வரலாற்றுக் காட்சிகளை மையக் கருத்தாகக் கொண்டு நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட, ரூ.1.50 இலட்சம் செலவில் 5 நாட்டிய–நாடகங்களை நடத்திட ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டதின் அடிப்படையில், ஐந்து நாட்டிய–நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு, 16.3.2015 முதல் 20.3.2015 வரை சென்னை, தியாக பிரம்ம கான சபாவில் (வாணி மகால்) மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 27 நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றமும் செய்யப்பட்டுள்ளன.

## அரிய கலை நூல்கள் பதிப்பிப்பதற்கு மானியம் வழங்குதல்

**1.55** இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலை குறித்த நூல்கள் பதிப்பித்து, வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

## கிராமியக் கலை, இசை, நாடகக் கலையில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் இளைய தலைமுறையினர் கண்டுணர கலைகளை ஆவணப்படுத்துதல்

**1.56** தமிழக அரசால் அடையாளம் காணப்பட்ட **100** நாட்டுப்புறக் கலை வடிவங்கள் அழிந்து வரும் நிலையில், அக்கலைகளை இளையதலைமுறையினருக்கு கொண்டு சென்றால் மட்டுமே பாதுகாத்திட முடியும் என்பதால், ஒவ்வொரு துறையில் உள்ள வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளித்தல் மற்றும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் படைப்புகளை, இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் வண்ணம் தேவையான இசைக்கருவிகள், பயிற்சிப் பொருட்கள் கொண்டு, முதுபெரும் வல்லுநர்களைக் கொண்டு

கலைப்பயிற்சி அளித்திட ரூ.10.00 இலட்சம் செலவில் கலைப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**1.57** நலிந்து வரும் கிராமியக் கலைகளை, முதுபெரும் கிராமியக் கலைஞர்களிடமிருந்து, வருங்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் வகையில், கலைகளை ஆவணப்படுத்திட ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கலைகள் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன.

## இயல் இசை நாடக மன்ற கலை விழாக்கள்

**1.58** தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் தொன்மை மிக்க பழம்பெரும் கலைகளை இன்றைய இளம் தலைமுறையினர் கண்டுணர்ந்து, பண்பாட்டினை உணரும் வண்ணமும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணம் பல்வேறு கலைவிழாக்களையும், நாட்டுப்புறக் கலை விழாக்களையும் நடத்தி வருகின்றது.

**1.59** தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், குற்றாலத்தில் நடைபெற்ற சாரல்விழா, திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர், ஸ்ரீபொத்தையில்

நடைபெற்ற ஸ்ரீமுத்துகுமாரசாமி குருபூஜை மற்றும் தேர்த்திருவிழா, சென்னை பாரதீய வித்யா பவன் கலையரங்கத்தில் நடைபெற்ற பஞ்சமூர்த்தி இசை நாட்டிய நாடக விழா ஆகிய கலை விழாக்களில் **350–க்கும்** மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கினர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், தமிழகத்திற்கு வெளியே நடைபெற்ற இமாச்சல பிரதேசம், குல்லு தசரா திருவிழா, இராஜஸ்தான் ஜெய்ப்பூர் லோக்ரங் கலை விழா மற்றும் கொல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் கலை விழா ஆகிய கலைவிழாக்களில் **170–க்கும்** மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## அகில இந்திய அளவில் இயல், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு விருது வழங்குதல்

**1.60** தேசிய அளவில் புகழ் பெற்ற இயல், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கும்

பொருட்டு முறையே **“பாரதியார்", “திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி", “திருமதி பாலசரஸ்வதி”** ஆகியோர் பெயரில் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புடைய மூன்று உயரிய விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**1.61** தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற வளாகத்தில் உள்ள கலையரங்கத்தில் ரூ.**4.00** இலட்சம் செலவில் குளிரூட்டும் வசதிகளும், திறந்த வெளி கலையரங்கில் ரூ.**3.00** இலட்சம் செலவில் ஒளி, ஒலி அமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு

**1.62** பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் படைப்புகளாக விளங்கும் கவின் கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு அரசால் **1975** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

## கலைச்செம்மல் விருது வழங்கும் திட்டம்

**1.63** ஓவிய, சிற்பக்கலைத் துறைகளில் சிறந்த சாதனை புரிந்த கலை வல்லுநர்களின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் மரபுவழி, நவீனபாணி கலைப்பிரிவுகளைச் சார்ந்த புகழ்மிக்க ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு **கலைச்செம்மல் விருதுகள்** வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பாராட்டுச் சான்றிதழுடன் ரூ.20,000/– பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது. இதுவரை மரபு வழிப் பிரிவில் 11 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 42 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாநில அளவில் ஓவிய–சிற்பக் கண்காட்சி (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) நடத்துதல் மற்றும் விருது வழங்கும் திட்டம்

**1.64** மரபுவழி, நவீனபாணிக் கலைக் காட்சிகள் ஓவிய, சிற்பக் கலைகளை மேம்படுத்தவும், படைப்பாளர்களை ஊக்குவிக்கவும் நடத்தப்படுகின்றன. மாநில அளவில் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின்

மூலம் (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) ஓவிய–சிற்பக் கலைக்காட்சி நடத்திட, தமிழகம் முழுவதும் இருந்து ஓவியங்கள் / சிற்பங்கள் / கலை படைப்புகள் பெறப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் / சிற்பங்கள் / கலை படைப்புகள் கண்காட்சியாக வைக்கப்பட்டும், மரபுவழி / நவீனபாணி ஓவிய சிற்பக் கலைஞர்களின் சிறந்த படைப்புகளுக்கு விருதுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது. சிறந்த படைப்புகளுக்காக இவ்விருதுகள் 30 வயதுக்கு மேற்பட்ட 20 மூத்த (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) கலைஞர்களுக்கு ரூ.9,000/– வீதமும், 30 வயதுக்குட்பட்ட 20 இளங்கலைஞர்களுக்கு (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) ரூ.3500/– வீதமும் என மொத்தம் நாற்பது கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

1.65 2014–2015 ஆம் நிதியாண்டில் 40 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. சென்னை அருங்காட்சியகத்தில் 181 கலைப் படைப்புகளை கொண்டு மாநில அளவிலான ஓவியம் மற்றும் சிற்பக்

கலைக்காட்சி ரூ.4.00 இலட்சம் செலவில் 19.3.2015 முதல் 23.3.2015 வரை நடத்தப்பட்டது.

## ஒவ்வொரு கலைஞரும் தனியாக கலைக்காட்சி (One man Show) நடத்த அல்லது கலைஞர்கள் குழுவாக சேர்ந்து கலைக்காட்சி (Group Show) நடத்த நிதியுதவி வழங்கும் திட்டம்

1.66 தமிழகத்தில் திறமைவாய்ந்த, தகுதியுள்ள ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக அவரவர்கள் கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகளை நடத்திட ஒவ்வொரு கலைஞரும் தனியாக நடத்தும் கலைக்காட்சிக்கு (One man Show) ரூ. 7,500/– வீதமும், கலைஞர்கள் குழுவாக சேர்ந்து நடத்தும் கலைக்காட்சிக்கு (Group Show) ரூ.15,000/– வீதமும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், நுண்கலைகள் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் வாய்ப்பாக அமைகிறது.

## இளங்கலைஞர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்

**1.67** சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ, மாணவிகளுக்கு ரூ.**5,000/–** வீதமும், இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ, மாணவிகளுக்கு ரூ.**3,000/–** வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை **568** இளங்கலை மாணவ, மாணவிகளுக்கும், **78** முதுகலை மாணவ, மாணவிகளுக்கும் படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாவட்டங்களில் கலைக் கூடங்கள்

**1.68** தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்களின் படைப்புகள் கொண்ட மூன்று கலைக்கூடங்கள் உதகமண்டலம், மதுரை மற்றும் சென்னையில் அரசு கவின் கலைக் கல்லூரியிலும் இயங்கி வருகின்றன.

## தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

**1.69** தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறார்களின் கவனங்களை சிதறவிடாமல் நல்வழியில் செலுத்துவதற்காகவும், பொதுக்கல்வியுடன் கலைக்கல்வி வழங்குவதை அடிப்படைப்பணியாகக் கொண்டு, கலைகளில் பயிற்சிகள் அளித்தல், சிறார்களின் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்புகள் வழங்குதல், சிறார்களின் தனித்திறமையை கண்டுணரச் செய்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு, **1979–** ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டு, தற்போது மாநிலம் முழுவதும் **40** இடங்களில் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்கள், ஊரக மையங்கள் என செயல்பட்டு வருகிறது.

## மாவட்ட ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள்

**1.70** சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோயில், தஞ்சாவூர், காஞ்சிபுரம்,

சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருட்டிணகிரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 24 மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்

**1.71** பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை (டாக்டர் எம்.ஜி.ஆர் காது கேளாதோர் பள்ளி, இராமாபுரம்), மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் 10 ஜவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள்

**1.72** புதுக்கோட்டை மாவட்டம் பொன்புதுப்பட்டி, மதுரை எல்லிசு நகர் ஆகிய இரண்டு இடங்களில் சிறுவர்களுக்கு கலைத்திறனை கற்றுக்கொடுக்க ஜவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் செயல்படுகின்றன.

## சென்னையில் செயல்படும் ஐந்து மையங்கள்

**1.73** சென்னையில் மயிலாப்பூர், வியாசர்பாடி, வில்லிவாக்கம், சேலையூர், மேற்கு தாம்பரம் ஆகிய இடங்களில் ஐந்து ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர பயிற்சிகள்

**1.74** ஜவகர் சிறுவர் மன்றங்களில் குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு(பேண்ட்ஸ்), தையல், ஓவியம்—வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய இருபது கலைகளில் பகுதி நேரப் பயிற்சி வழங்கப்படுகிறது.

சென்னையில் வசிக்கும் சிறார்கள் பயன்பெற்றிட ஏதுவாகவும், சிறுவர் மன்றப் பயிற்சிகளை பரவலாக்கிடவும், ஐந்து சிறுவர் மன்ற மையங்கள்

குடியிருப்புப் பகுதியில் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

மயிலாப்பூர்—சென்னை

கிருஷ்ணமூர்த்தி நகர், வியாசர்பாடி – சென்னை

சேலையூர், தாம்பரம் – சென்னை

வில்லிவாக்கம் – சென்னை

மேற்கு தாம்பரம் – சென்னை

## தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்றத்தின் பங்கு

1.75 புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம் புதுதில்லியில் 25.8.2014 முதல் 30.8.2014 வரை நடைபெற்ற 2013 ஆம் ஆண்டிற்கான தேசிய பாலஸ்ரீ விருது தெரிவு முகாமில் தமிழ்நாட்டிலிருந்து, தென்மண்டல போட்டியில் தெரிவு பெற்ற 13 சிறார்கள் கலந்து கொண்டனர்.

1.76 புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 125—ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு குழந்தைகள் தினவிழாக்

கொண்டாட்டங்கள் **14.11.2014** முதல் **20.11.2014** வரை நடைபெற்றன. **14.11.2014** அன்று நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவின் தொடக்க விழாவில், சென்னை ஜவகர் சிறுவர் மன்றச் சிறார்களின் சிறப்பு பரதநாட்டியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

**1.77** குழந்தைகள் தினவிழா கொண்டாட்டத்தில், தமிழகத்தில் தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் **21** ஜவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து **46** மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, தமிழகத்தின் பாரம்பரிய கலை நடனங்களை வெளிப்படுத்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்தனர்.

**1.78** குஜராத் மாநிலம், ஜீனா கார்ட்ச் மாவட்டத்தில் **7.1.2015** முதல் **11.1.2015** வரை நடைபெற்ற இளையோருக்கான தேசிய சுற்றுச் சூழல் மாநாட்டில் தமிழகத்திலிருந்து **12** மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## மாநில அளவிலான திட்டங்கள்

### கோடைக்கால / மாரிக்கால முகாம்

**1.79** திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் நகரில் **18.5.2014** முதல் **26.5.2014** வரை மாநில அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாமும், வேலூர் மாவட்டம், ஆற்காடு நகரில் **24.12.2014** முதல் **31.12.2014** வரை குளிர்கால கலைப்பயிற்சி முகாமும் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, சிலம்பம், யோகா ஆகிய கலைகளில் **200** மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். குளிர்கால கலைப்பயிற்சியில் மல்லர் கம்பம் என்ற கலையில் சிறார்களுக்கு சிறப்புக் கலைப்பயிற்சி அளிக்கப்பட்டது.

### மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம்

**1.80** தஞ்சாவூர் மாவட்டம், தென்னகப் பண்பாட்டு மைய வளாகத்தில், **100** சிறார்களுக்கு **27.9.2014** முதல் **5.10.2014** முடிய சுடுமண் சுதை சிற்பம், பொம்மை

செய்தல், துணி ஓவியம், கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் ஆகிய கலைகளில் மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

## மாவட்ட / மாநில கலைப்போட்டிகள்

**1.81** மாணவ, மாணவிகளின் கலை ஆர்வத்தை ஊக்குவித்திட குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியம் ஆகிய நான்கு வகைக் கலைகளில் **5–8, 9–12, 13–16** வயது பிரிவுகளில் உள்ளவர்களுக்கு, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட அளவில் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

**1.82** மாவட்டப் போட்டிகளில் முதல்பரிசு பெற்ற மாணவ, மாணவிகளிடையே மாநில அளவிலான கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல்பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.10,000/–வீதமும், இரண்டாவது பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.7,500/–வீதமும், மூன்றாவது பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக

ரூ.5,000/—வீதமும் என மொத்தம் ரூ.1,80,000/—த்திற்கு பரிசுத் தொகைகளும், பதக்கங்களும், சான்றிதழ்களும் 24 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

## தேசிய பாலஸ்ரீ விருது

1.83 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்கான தேசிய பாலஸ்ரீ விருதினை தமிழகத்தினை சேர்ந்த 11 மாணவ, மாணவிகள் 29.1.2015 அன்று புதுதில்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற விழாவில் மைய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளனர். அவர்களில் மூன்று மாணாக்கர்கள் மேடைக்கலைக்காகவும் (Creative Performance), மூன்று மாணாக்கர்கள் படைப்புக் கலைக்காகவும் (Creative Art), ஐந்து மாணாக்கர்கள் எழுத்துக்கலைக்காகவும் (Creative Writing) விருது பெற்றுள்ளனர். இவ்விருதுடன், ரூ.10,000/—க்கான கிசான் விகாஸ் பத்திரம், சான்றிதழ் ஆகியவை மாணவ, மாணவியருக்கு மைய அரசால் வழங்கப்பட்டது. மைய அரசிடமிருந்து விருது பெற்ற, 11 மாணவ,

மாணவிகளுக்கு தமிழக அரசின் சார்பில் தலா ரூ.10,000/– வழங்கி பாராட்டப்படவுள்ளனர்.

1.84 2013 ஆம் ஆண்டில், தமிழகத்தினை சேர்ந்த 7 மாணவ, மாணவியர் தேசிய பாலஸ்ரீ விருதிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விரைவில் மைய அரசால் விருதுகள் வழங்கப்படவுள்ளது.

1.85 ஜவகர் சிறுவர் மன்ற மாணவர்களுக்கு கலைப்பயிற்சிக்குத் தேவையான கலைப்பொருட்கள் ரூ.2.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

## 1.86 2014–2015 ஆம் நிதியாண்டில் கலை பண்பாட்டுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய வளர்ச்சித் திட்டங்கள்

சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளில் முதலாமாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் 149 மாணவ, மாணவிகளுக்கு ரூ.25.88 இலட்சம் மதிப்பில்

விலையில்லா மடிக்கணினிகள் வழங்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, கலை வடிவங்களை ஆவணமாக்குதல், தமிழ் இலக்கிய காட்சிகளை மையமாகக் கொண்டு ஐந்து நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்தல், வரலாறு, தமிழ் இலக்கியத்தை மையமாகக் கொண்டு ஐந்து நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்தல், கிராமியக் கலைஞர்களுக்கும், கலைக்குழுக்களுக்கும் இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்குதல், இளம் தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இளம் கலைஞர்களுக்கு கிராமியக் கலைகளில் இசை நாடகத்துறையில் பயிற்சி அளித்தல், மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித்தொகையினை ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்குதல் போன்ற பல்வேறு சட்டமன்ற அறிவிப்புகளை செயல்படுத்தும் பொருட்டு ரூ.54.26 இலட்சம் மன்றத்திற்கு நல்கையாக வழங்கப்பட்டது.

ஸ்ரீரங்கத்தில் மார்கழி இசைவிழா, எட்டையபுரத்தில் ஸ்ரீமுத்துசாமி தீட்சிதர் ஜெயந்தி விழா, காஞ்சிபுரத்தில் மகாசிவராத்திரி விழா, உதகையில் தேயிலை–சுற்றுலா விழா, ஏற்காட்டில் கோடைவிழா, மகாகவி பாரதியார் விழா, வால்பாறையில் கோடைவிழா, கவின் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு பயிலரங்கம் நடத்துதல், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் கலை விழாக்கள் நடத்துதல், சென்னையில் மாநில அளவில் நுண்கலைக் கண்காட்சி நடத்துதல், மெலட்டூர் பாகவத மேளா, திருவையாறு தமிழிசை விழா, வள்ளியூர் ஸ்ரீபொத்தையில் இயல் இசை நாடக நாட்டிய நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள், விராலிமலையில் தைப்பொங்கல் கலைவிழா மற்றும் தஞ்சாவூரில் நடைபெற்ற பாரம்பரிய கலைவிழா போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக ரூ.**50.95** இலட்சம் வழங்கப்பட்டது.

தமிழகத்திற்கு வெளியே, ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெற்ற கிராமியக் கலைவிழா, இமாச்சல பிரதேசம் குல்லுவில் நடைபெற்ற தசரா திருவிழா, இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஜவஹர் கலாகேந்திராவில் லோக்ரங் விழா

மற்றும் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கலைவிழா ஆகிய பல்வேறு கலைவிழாக்களுக்காக ரூ.13.20 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்தியாவிற்கு வெளியே, தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற ஸ்ரீமகாமாரியம்மன் திருக்கோவில் நவராத்திரி கலைவிழா மற்றும் ஆஸ்திரேலியாவில், பல்வேறு நகரங்களில் நடைபெற்ற கலைவிழாக்களுக்காக ரூ.20.68 இலட்சம் வழங்கப்பட்டது.

**1.87 2014–2015 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் துறையால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் விவரம் :–**

| வ. எண் | திட்ட விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கலை பண்பாட்டு இயக்கக அலுவலகத்திற்கு கணினி உபகரணங்கள் வாங்குதல் | **2.00** |
| 2 | சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகளுக்கு இசைக்கருவிகள் வாங்குதல் மற்றும் பழுது பார்த்தல் | **15.00** |

| | | |
|---|---|---|
| 3 | சென்னை அரசு இசைக்கல்லூரியில் முட்புதர்கள் அகற்றிட புல்வெட்டும் இயந்திரம் மற்றும் தோட்டக் கருவிகள் வாங்குதல் | **1.00** |
| 4 | சென்னை அரசு இசைக்கல்லூரியில் வகுப்பறைகளில் கரும்பலகைகள் அமைத்தல் | **1.00** |
| 5 | மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு கணினியில் AutoCad பயிற்சி அளித்தல் | **1.00** |
| 6 | சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்கு வரைபடத் தாங்கிகள், சிற்பம் செய்வதற்கான அடிப்படை பலகைகள், களிமண் சிற்பங்கள் நிறுவ தேவையான நிறுத்திகள் வாங்குதல் | **6.00** |
| 7 | சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியின் துகிலியல் துறை பிரிவிற்கு தளவாடங்கள் வாங்குதல் (டைலரிங் மெஷின் உள்ளிட்டவை) | **1.00** |

| | | |
|---|---|---|
| 8 | ஜவகர் சிறுவர் மன்றங்களில் பயிற்சி பெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு பயிற்சிப் பொருட்கள் வாங்குதல் | **2.00** |
| 9 | தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழுவின் மூலம் ஓவியர்கள் முகாம் (ஓவியம் / சிற்பம்) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்துதல் | **2.00** |
| 10 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலையரங்கத்திற்கு குளிரூட்டும் வசதி செய்தல் | **4.00** |
| 11 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் திறந்த வெளி கலையரங்கத்திற்கு ஒலி–ஒளி அமைப்பு வசதிகள் செய்தல் | **3.00** |
| 12 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் மூலம் இளைய தலைமுறையினருக்கு நாட்டுப்புறக் கலைப்பயிற்சி அளித்தல் | **4.00** |

| | | |
|---|---|---|
| 13 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இலவச இசைக் கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்குதல் | **3.00** |
| 14 | சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதிய பொலிரோ சீருந்து வாங்குதல் | **6.25** |
| 15 | மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி வளாகத்தில் கலை அரங்கம் கட்டுதல் | **7.75** |
| 16 | சென்னை அரசு இசைக்கல்லூரியில் அலுவலகப் பயன்பாட்டிற்கு கணினி உபகரணங்கள் வாங்குதல் | **1.00** |
| 17 | சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் வண்ணக்கலைப் பிரிவில் நவீன பயிற்சி முறையினை செயல்படுத்துதல் | **15.00** |
| 18 | சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகளில் வயலின் இசைக் கருவியில் நவீன கற்பிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல் | **10.00** |

| | | |
|---|---|---|
| 19 | சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகளில் கீ—போர்டு இசைக்கருவியில் நவீன கற்பிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல் | **10.00** |
| 20 | சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் புதிய டிஜிட்டல் பதிவு அரங்கு நிறுவுதல் | **13.00** |
| 21 | சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் ஒளி—ஒலி நூலகம் அமைத்தல் | **2.00** |
| | **மொத்தம்** | **110.00** |

**முடிவுரை**

கலை பண்பாட்டுத் துறையால் மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ் மக்களுடைய நாகரீகம், பண்பாடு செழித்தோங்கவும், இளம் கலைஞர்களின் திறமைகளை ஊக்குவிக்கவும், அழிந்து வரும் கலைகளை ஆவணமாக்கி எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லவும், இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

# அருங்காட்சியகங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015–2016

## 2. அறிமுகம்

அருங்காட்சியகம் என்பது வரலாறு, இயற்கை அறிவியல் மற்றும் இயற்பியல் அரும்பொருட்களை சேகரித்து எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து தருகின்ற ஒரு நிறுவனமாகும். அருங்காட்சியகங்கள் பொதுமக்கள் கண்டுகளிக்கின்ற வகையில் நிரந்தரமான காட்சிக்கூடங்களிலும், சிறப்பு மற்றும் கருத்தியல் சார்ந்த கண்காட்சிகளிலும் அரும்பொருட்களை காட்சிக்கு வைக்கின்றன. அருங்காட்சியகங்கள் தனது சேகரிப்புகள் வழியாக அனைத்துத் தரப்பினருக்கும் முறைசாராக் கல்வியினை வழங்கி வருகின்றன. அருங்காட்சியகம் தனது சேகரிப்பின் மூலமாக அறிவாற்றல் மிக்க சமுதாயத்தினை உருவாக்குகின்ற பணி மற்றும்

அறிவினை பரவலாக்கம் செய்கின்ற பணியினையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. அருங்காட்சியகங்களின் சான்றாதாரங்களாக விளங்கும் சுட்டுப் பொருட்கள், இயங்கு மாதிரிகளுடனான காட்சி அமைப்புகள் மாணவர்களுக்கு கூடுதல் காட்சி மூலம் விளக்குகிறது. பொழுது போக்கின் வழி கற்றல் மற்றும் பொழுது போக்கின் வழி தகவலைப் பெறுதல் வாயிலாக பார்வையாளர்களை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்கிறது. அருங்காட்சியகம் தனது காட்சியமைப்பின் வழியாக பாமரன் முதல் பண்டிதர் வரை வெவ்வேறு கோணங்களில் அரும்பொருள்களை உணரச் செய்கிறது. கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், சொற்பொழிவுகள், கண்காட்சிகள், வெளியீடுகள், வழிகாட்டிப் பலகைகள், விளக்கப் பலகைகள், கேட்டொலி வழிகாட்டு கருவிகள் மற்றும் காட்சிக்கூடங்களில் வழங்கப்படும்

விளக்கவுரைகள் இவற்றின் வழியே அருங்காட்சியகமானது பார்வையார்களுக்கும் மாணவர்களுக்கும் பலதரப்பட்ட கற்றல் அனுபவங்களை வழங்குகின்றது. மேற்காணும் இலக்குகளை அடைய அருங்காட்சியகத் துறையானது கடுமையாக உழைத்து வருகின்றது.

## அரசு அருங்காட்சியகம், சென்னை

**2.1** கி.பி. **1851–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை அரசு அருங்காட்சியகம் இந்தியாவிலேயே இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாகும். இவ்வருங்காட்சியகம் நகரின் மையப் பகுதியில் மூன்று பாரம்பரியக் கட்டடங்கள் உள்ளிட்ட, ஆறு கட்டடங்களில் அமையப் பெற்றுள்ளது. இங்கு கலை, தொல்லியல், நாணயவியல், மானுடவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் உள்ளிட்ட

பிரிவுகளைக் கொண்ட 45 காட்சிக்கூடங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகம் சுமார் 16.25 ஏக்கர் நிலப்பரப்பில் அமையப்பெற்றுள்ளது. இவை தவிர கல்வி, வடிவமைப்பு மற்றும் வேதியியல் பாதுகாப்பு பிரிவுகள் பொது மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன. உலகப் புகழ் பெற்ற செப்புப் படிமங்கள், அமராவதி சுண்ணாம்புக் கற்களாலான சிற்பங்கள், இராபர்ட் புரூஸ் பூட் அவர்களின் வரலாற்று காலத்திற்கு முற்பட்ட கால சேகரிப்புகள், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகள், இந்திய நாணயங்கள், நீலத்திமிங்கிலத்தின் எலும்புக்கூடு, இரவிவர்மாவின் ஓவியங்கள் உள்ளிட்டவை சென்னை, அரசு அருங்காட்சியகத்தின் சிறந்த சேகரிப்புகளாகும். சென்னை, அரசு அருங்காட்சியகத்தின் புவியியல் பிரிவு மற்றும் சிறுவர் அருங்காட்சியகத்தில் இயங்கு மாதிரி காட்சியமைப்புகள் உள்ளன.

## மாவட்ட அருங்காட்சியகங்கள்

**2.2** சென்னையில் உள்ள தலைமை அரசு அருங்காட்சியகம் தவிர புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், மற்றும் விருதுநகர் ஆகிய **20** மாவட்டங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் தமிழக அரசு அருங்காட்சியகத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட காட்சிக்கூடங்கள் மற்றும் திட்டங்கள்

**2.3** மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் சென்னை, புனித ஜார்ஜ்

கோட்டை, தலைமைச் செயலகத்தில் காணொலி காட்சி வழியாக 27.06.2014 அன்று புத்தாக்கம் செய்யப்பட்ட ஒன்பது காட்சிக்கூடங்களும் மற்றும் மேலும் பல திட்டங்களும் தொடங்கி வைக்கப்பட்டன. நேர்நிகர் அருங்காட்சியகம் மற்றும் அருங்காட்சியக உலா ரதம் (Museo' Bus) தொடங்கி வைக்கப்பட்டது. இதில் அருங்காட்சியக உலா ரதம் அருங்காட்சியகத்தின் பலனை பள்ளிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்கு கொண்டு சேர்க்கின்ற முன்னோடித் திட்டமாக விளங்குகின்றது.

## 2014–2015 ஆம் ஆண்டு பகுதி II திட்டங்கள் / திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 54 இலட்சம்

2.4 2014–2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பகுதி II திட்டங்கள்:–

1. பாறை மற்றும் குகைக்கலை காட்சிக்கூடத்தில் மின் விளக்குகள் மற்றும் மின் உபகரணங்கள் ரூ.1.50 இலட்சம் செலவில் மாற்றப்பட்டது.
2. நாகப்பட்டினம், ஈரோடு, உதகமண்டலம் மற்றும் பழனி மாவட்ட அருங்காட்சியகங்களில் புதிய நவீன காட்சிப்பெட்டிகள் ரூ.4.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.
3. திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அருங்காட்சியகங்களில் பழைய காட்சிப் பெட்டிகள் ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
4. சென்னை, அரசு அருங்காட்சியக வளர்கலைக் கூடத்தில் காட்சியமைப்புப் பணிகள்

ரூ.4.48 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன.

5. புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட அருங்காட்சியகங்களில் ரூ.4 இலட்சம் செலவில் காட்சியமைப்பு மேம்படுத்தப்பட்டன.

6. திருவாரூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நாகப்பட்டினம், கரூர் மற்றும் பழனி மாவட்ட அருங்காட்சியகங்களில் ரூ.3 இலட்சம் செலவில் விளக்கப் பலகைகள் மற்றும் வழிகாட்டுப் பலகைகள் அமைக்கப்பட்டன.

7. புதுக்கோட்டை மாவட்ட அருங்காட்சியகத்தில் இயங்கு மாதிரி டைனோசர் உருவம் நிறுவும் பணி ரூ.18 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

8. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பறக்கும் ஊர்வன இயங்கு மாதிரி ஒன்று சென்னை அருங்காட்சியக புவியியல் பிரிவில் ரூ.7 இலட்சம் செலவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டம்

2.5 சென்னை மாநகரத்தின் அடையாளச் சின்னங்களுள் ஒன்றாக விளங்கும் தேசியக் கலைக்கூடம் இந்தோ–சாரசெனிக் கட்டடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கும் ஒரு கட்டடமாகும். இக்கட்டடத்தினைப் புனரமைத்து பாதுகாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 110 விதியின் கீழ் ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

இப்பணிக்காக இத்துறையில் வல்லுநர் என்ற அடிப்படையில் முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அருங்காட்சியகங்களின் ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களுடன் ஓய்வு பெற்ற தொல்லியல் கண்காணிப்பாளர் (இந்திய தொல்லியல் பரப்பாய்வுத் துறை) திரு கே.டி.நரசிம்மன் அவர்கள் மற்றும் இத்துறையில் அனுபவம் பெற்றவர்களான மாநிலத் தொல்லியல் துறை மற்றும் சென்னை வட்ட, இந்திய தொல்லியல் பரப்பாய்வுத் துறை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று தேசிய கலைக்கூட கட்டடத்தினைப் புனரமைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரையின்

அடிப்படையில் பொதுப்பணித்துறை பணியினைத் தொடங்கியுள்ளது.

**2012–2013 ஆம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் போது வெளியிடப்பட்ட அறிவிப்பு**

**2.6** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் அரியலூரில் ‘புதை உயிரிப்படிவ கள அருங்காட்சியகம்’ அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள். இந்த புதை உயிரிப்படிவ கள அருங்காட்சியகம் அமைப்பதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டு அருங்காட்சியக கட்டடம் கட்டுவதற்குரிய கணினி வழி முப்பரிமாண வடிவமைப்பு வரைபடம் பொதுப்பணித்துறையினரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

27.06.2014 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அறிவிப்புகள் 2014 – 2015

**2.7** **(1)** மதராஸ் மாஹாணத்தில் முன்பு வழக்கிலிருந்த பழங்குடியினர் மொழிகள் அடங்கிய ஒலிக்குறிப்புகளை பொதுமக்களும் ஆய்வாளர்களும் பயன்பெறும் வகையில் தனித்த வலைதள பக்கத்தில் பதிவேற்றம் செய்ய மற்றும் கண்ணாடி எதிர்ப் பிரிதிகளை எண்ணிலக்கம் செய்ய ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**(2)** தமிழக அரசு அருங்காட்சியகத்துறையின் 24 ஆயிரம் பக்கங்களை உடைய வெளியீடுகளை

மின்னணுப் பதிப்பாக தனி வலைதளத்தில் வெளியிட ஏதுவாக எண்ணிலக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் 2015–க்குள் எல்காட் நிறுவனத்தால் பதிவேற்றம் செய்யப்பட உள்ளது. இத்திட்டம் உலகிலேயே ஒரு அருங்காட்சியகத்தால் துவக்கப்பட்ட ஒரு முத்தாய்ப்பான துவக்கமாகும்.

**2014–2015–இல் சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் கீழ்க்காணும் குறிப்பிடும்படியான கல்விப்பணிகள் நடைபெற்றன**

**2.8 (1) 2014**, மே **18**ம் நாள் பன்னாட்டு அருங்காட்சியக தினத்தினை முன்னிட்டு “தென்னிந்தியாவின் புத்த படிமங்கள்” எனும் கண்காட்சி நடத்தப்பட்டது. இதில் தமிழகத்தில் கடந்த பத்தாண்டுகளில் கண்டெடுக்கப்பட்ட அரிய வகை

புத்தர் சிற்பங்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

(2) அருங்காட்சியகக் கலைப் பொருட்களைப் பாதுகாக்கின்ற ஒரு மாத கால புத்தொளிப் பயிற்சி வகுப்பு வேதியியல் பிரிவில் 03.06.2014 அன்று தமிழக அரசின் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை (பண்பாட்டுத்துறை உட்பட) அமைச்சர் திரு கே.சி.வீரமணி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் “ கிராபைட் ” என்னும் திங்கள் காட்சிப்பொருள் கண்காட்சியும், அருங்காட்சியக வளாகத்தில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் திட்டமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

(3) 17.11.2014 அன்று “குழந்தைகள் தினம்” கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தினைச் சார்ந்த சுமார் 450 பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

(4) பன்னாட்டு மகளிர் அமைப்பின் அறக்கட்டளைச் சொற்பொழிவு 28.01.2015 அன்று நடைபெற்றது. இதில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின், கோட்டை அருங்காட்சியகத் துணைக் கண்காணிப்பாளர் திருமதி. கே.மூர்த்தீஸ்வரி “இந்திய மற்றும் அயல்நாட்டில் உள்ள தொல்லியல் அருங்காட்சியகங்களின் வகைகள்” என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

**பல துறைகளுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் சேவைகள்**

**2.9 (1)** சென்னை, அருள்மிகு பார்த்தசாரதி கோயிலில் இரண்டு சுவர் ஓவியங்கள் சிதைக்கப்பட்டும் சிமெண்ட் பூச்சு பூசப்பட்டும் இருந்ததை கண்டறிந்து அவற்றை பாதுகாத்து மீட்டு உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(2.)** சென்னை, உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதிகளின் உருவ ஓவியங்களை சென்னை அரசு அருங்காட்சியகம் சீரமைக்க உள்ளது. ஏறக்குறைய 100 உருவ ஓவியங்கள் சென்னை அருங்காட்சியக வேதியியல் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தால் சீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

(3) சென்னை, உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள பாரம்பரியம்மிக்க கட்டடங்களை பாதுக்காக்கவும் உயர்நீதி மன்ற வளாகத்தில் அருங்காட்சியகம் அமைக்கவும் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய குழுவில் முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அவர்கள் அரசால் ஓர் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**முடிவுரை**

"காட்சிப் பொருள் சார்ந்த காட்சியமைப்பு" என்பதிலிருந்து கருத்தியல் சார்ந்த காட்சியமைப்பு என்ற நிலைக்கு அருங்காட்சியகங்கள் மாறி வருகின்றன. காட்சிபொருட்களை மையப்படுத்துதல் என்பது மாற்றம் பெற்று பார்வையாளர்களை மையப்படுத்தியே காட்சியமைப்புகள் அண்மை காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அருங்காட்சியகங்கள்

மிகவும் அதிக அளவிலான கல்விப் பணிகளை பார்வையாளர்கள் மற்றும் பள்ளி–கல்லூரி மாணவர்களின் தேவையின் பொருட்டு செய்து வருகின்றன. வழக்கமான கல்விப்பணிகளுடன் அருங்காட்சியக உலா ரதப் பேருந்து சென்னை மாநகரத்தின் மூலை முடுக்குகள் மற்றும் புறநகர் பகுதிகள் மற்றும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று வருகிறது. நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் அறிவு பரவலாக்கத்தினை செய்து வருகின்றன. அந்த வகையில் அறிவினை பாதுகாக்கும் மற்றும் பரவலாக்குகின்ற பணியினை செய்வதில் அருங்காட்சியகங்கள் தொடர்ந்து பங்காற்றி வரும்.

# தொல்லியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2015 – 2016

## 3. முன்னுரை

தொல்லியல் என்பது தொடர் ஆய்வு செய்வது; புதிய கண்டுபிடிப்புகளை அறிவது; முற்றுப் பெறா தொடர்ந்து பயணிப்பது ஆகும்; ஆய்விற்கு முடிவு என்பதில்லை. தொல்லியல் நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற பொருட்களைக் கொண்டு தொழில்நுட்ப வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட மனிதனுடைய வாழ்வியலின் முன்னேற்றத்தினை எப்பொழுதும் உறுதியாக நம்பகத் தன்மையுடன் உணர்ந்து கொள்ள உதவுகிறது. நம் முன்னோர்களால் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள், கல் ஆயுதம், சக்கரம் மற்றும் பிற கலைப் பொருட்கள் இன்றைய மனிதர்களின் வாழும் தன்மை மற்றும் நவீன கணினிக்கெல்லாம் முன்னோடியாக அமைந்தன என்பது தான் உண்மை.

**தொல்லியல் துறை**

**3.1** பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்து பராமரிப்பதையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களை அகழாய்வின் மூலம் வெளிக்கொணர்வதையும் முதன்மையான நோக்கமாக கொண்டு தமிழ்நாடு அரசால் **1961–**ஆம் ஆண்டு தொல்லியல் துறை தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து அதனை நூலாக்கம் செய்தல், அகழ்ந்தெடுத்த தொல்பொருட்களைக் கொண்டு **14** இடங்களில் அகழ்வைப்பகம் அமைத்தல், தொல்பொருட்களை இரசாயன முறையில் சுத்தம் செய்தல், கலைப் பொருட்களை நிழற்படங்கள் கொண்டு ஆவணப்படுத்துதல் போன்ற பணிகளுடன் விரிவு படுத்தப்பட்டது. பணியாளர்கள் மற்றும் படிப்பார்வலர்களின் பயன்பாட்டிற்கென சென்னை ஆணையரகத்தில் ஒரு தனி நூலகம் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்துறையின் தொழில்நுட்ப செயல்பாடுகளுக்கு ஏற்றுவாறு உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**3.2** தொல்லியல் துறை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், உதவி நிர்வாகச் செயற்பொறியாளர், மண்டல உதவி இயக்குநர், **13** காப்பாட்சியர்கள், கல்வெட்டாய்வாளர், தொல்லியல் அலுவலர், அகழ்வாய்வாளர், வரலாற்றுக்கு முந்தைய கால அகழாய்வாளர், இட ஆய்வு மற்றும் அகழாய்வு தொல்லியலாளர் உதவியுடன் தொல்லியல் துறை இயங்கி வருகிறது.

## பாதுகாப்பு

**3.3** சமயஞ் சார்ந்த மற்றும் சமயஞ்சாரா **89** புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழக அரசால் இதுவரை அறிவிக்கப்பட்டுள்ளன. பதிமூன்றாம் நிதிக்குழு மானியத்தின் கீழ் **30** வரலாற்றுச் சின்னங்களை பேணிப் பாதுகாக்க **2011–2014** வரையிலான காலத்திற்கு ரூ.**970.70** இலட்சத்தில் ரூ.**565.70** இலட்சம் பாதுகாப்பு பணிகளுக்கும் ரூ.**405** இலட்சம் உள்கட்டமைப்பு

பணிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பப்பட்டுள்ளன. 30 பணிகளில் 12 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 18 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

3.4 2013–2014 ஆம் ஆண்டு மூன்று புதிய சின்னங்களும் 2014–2015 ஆம் ஆண்டு ஒரு புதிய சின்னமும் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சின்னம் கீழ்வருமாறு :–

> ‘பாறை ஓவியம், தமிழ் பிராமி கல்வெட்டுகள், சமணர் படுக்கை, குடைவரைக் கோயில் ஆகியன’ திருமலை கிராமம், சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம்

***அரசாணை (நிலை) எண். 95, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 20.03.2015.***

**இந்து சமய அறநிலையங்கள் துறை பொறியாளர்களுக்கான 'பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு' என்னும் குறுகிய கால ஆறு வார காலப் பயிற்சி**

**3.5** நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் புராதன நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க **3.12.2014** முதல் **13.1.2015** வரை கோயில்கள் மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறையின் 22 பொறியாளர்களுக்கு 'பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு' என்னும் குறுகிய கால ஆறுவார காலப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது. இப்பயிற்சி பொறியாளர்களுக்கு தொல்லியல் விதிகளின்படி கோயில்களை பாதுகாப்பது மற்றும் புனரமைப்பது தொடர்பான விவரங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக மேலும் 22 பொறியாளர்களுக்கான பயிற்சி **19.03.2015** அன்று மாண்புமிகு உணவு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி **29.4.2015** அன்று நிறைவடைந்தது.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு

**3.6** தமிழகத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு மேற்கொள்வது, இத்துறையின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். இதுவரை அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட **37** இடங்களில் **36** இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகள் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. இவ்வகழாய்வுகளில் கிடைக்கும் தொல்பொருட்கள் இத்துறையின் கீழ் மாநிலத்தின் பல மாவட்டங்களில் செயல்படும் **14** அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களின் பார்வைக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், ஸ்ரீரங்கம் பகுதியில் அகழாய்வுப் பணி ரூ. **2** இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில், ஆயிரங்கால் மண்டபத்தில் மண்ணில் புதையுண்டிருந்த அழகிய யானைப் புடைப்பு சிற்பம் மற்றும் மனித உருவங்கள் அடங்கிய சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதில் ஒரு மனித உருவம்

யானைக்கு முன்புறத்தில் நின்ற நிலையில் யானையினுடைய துதிக்கையை பிடித்தவாறும், மற்றொரு மனித உருவம் யானையினுடைய பின்புறத்தை அங்குசம் போன்ற ஆயுதத்தை கொண்டு குத்துவது போன்று அமைந்துள்ளது. இப்புடைப்பு சிற்பங்கள் அதிஷ்டானப் பகுதியில் காணப்படுகிறது.

**3.7** திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் பகுதியில் அகழாய்வுப் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பொருட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் கீழ், ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தொல்லியல் அகழ்வைப்பகங்கள்

**3.8** அகழாய்வுகளில் கிடைக்கும் தொல்பொருட்கள் இத்துறையின் கீழ் செயல்படும் 14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

## துறையின் அகழ்வைப்பக விவரங்கள்

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம், மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி நாகப்பட்டினம் |
| 2) | ஆழ்கடல் அகழ்வைப்பகம் | பூம்புகார், நாகப்பட்டினம் |
| 3) | கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம் | கங்கைகொண்ட சோழபுரம், அரியலூர் |
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம், இராமநாதபுரம் |
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு , வேலூர் |
| 6) | வரலாற்று முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி, திருவள்ளூர் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை, மதுரை |
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர், தஞ்சாவூர் |
| 9) | மராட்டா அகழ்வைப்பகம் | தஞ்சாவூர், தஞ்சாவூர் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர், கரூர் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர், கோயம்புத்தூர் |
| 12) | குற்றாலம் அகழ்வைப்பகம் | குற்றாலம், திருநெல்வேலி |
| 13) | திருக்கோயிலூர் அகழ்வைப்பகம் | திருக்கோயிலூர், விழுப்புரம் |
| 14) | தருமபுரி அகழ்வைப்பகம் | தருமபுரி, தருமபுரி |

## கல்வெட்டு

**3.9** தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுகளைப் படியெடுத்து படித்து பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகின்றது. தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் 27 மாவட்டங்களிலிருந்து இந்நாள் வரை 24,271 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. தற்போது இத்திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் 14,000 மைப்படிகள் இத்துறை கல்வெட்டாய்வாளர்களால் படிக்கப்பட்டுள்ளன. படியெடுக்கப்பட்ட 6,426 கல்வெட்டுகள் 44 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

**3.10** சென்னை தலைமை அலுவலகத்தில் 1974–ஆம் ஆண்டு முதல் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ எனும் பிரிவில் ஓராண்டு முதுநிலைப் பட்டய வகுப்பு நடத்தப்படுகிறது. இந்த எட்டு மாணவர்களுக்கு பயிற்சி உதவித்

தொகையாக மாதந்தோறும் ரூ.2,000/– வழங்கப்படுகிறது. இதுவரை 214 மாணவர்களுக்கு முதுநிலை பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

## வெளியீடுகள்

**3.11** இத்துறையின் அச்சுப்பிரிவின் வாயிலாக கல்வெட்டுகள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்டத் தொல்லியல் கையேடுகள், தொல்லியல் சின்னங்கள், அகழ்வைப்பக வழிகாட்டி, கோயில்கள் குறித்த கையேடுகள் ஆகியவை தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடப்படுகின்றன. ‘கல்வெட்டு காலாண்டு இதழ்’ எனும் இதழும் இத்துறை அச்சுப்பிரிவு வாயிலாக வெளியிடப்படுகிறது. இத்துறையால் மொத்தம் **267** நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. துறையின் வெளியீடுகள் அனைத்தும் துறையின் வலைதளத்தில் (www.tnarch.gov.in) நவீன முறையில் எண்ணிலக்கம் செய்து மின்–வெளியீடாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

## நிழற்படம்

**3.12 த**மிழ்நாட்டில் அமைந்துள்ள கோயில்கள், கற்சிலைகள், சுவர் ஓவியங்கள் மற்றும் தொல்பொருட்களை இத்துறையின் நிழற்படமெடுப்பவர்கள் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், அகழாய்வின் பல நிலைகள் மற்றும் அகழாய்வு குழிகளில் கண்டெடுக்கப்படுகின்ற தொல்பொருட்களும் முறையாக உரிய நிழற்படங்களுடன் ஆவணப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. புராதன சின்னங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு பணிகளும் ஆவணப்படுத்தப்படுகின்றன.

## வேதியியல் பாதுகாப்பு

**3.13** அகழாய்வின் போது கிடைக்கப் பெறுகின்ற தொல்பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாக்க வேதியியல் பிரிவுகள் சென்னை மற்றும் மதுரையில் உருவாக்கப்பட்டன. பின்னர், அதன் பணி 14 அகழ்வைப்பகளுக்கும் மற்றும் மரபுச் சின்னங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும்

விரிவாக்கப்பட்டது. ஆண்டுதோறும் பராமரிப்புப் பணிகள் மற்றும் நிதிக்குழு மானியத்தின் கீழ் பல்வேறு இடங்களில் வேதியியல் முறையில் பாதுகாப்புப் பணிகள் இத்துறையின் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்து **89** பாதுகாக்கப்பட்ட சின்னங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

**3.14** இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பெருமைமிக்க அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இவ்வாராய்ச்சி மையம் **1869** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு முனைவர் பட்டம்பெறும் வரையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நூலகத்தில் கணிதம், வானசாஸ்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபி மற்றும் பாரசீக மொழிகளில் **72,748–க்கும்** மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள்

மற்றும் **25,373–க்கும்** மேற்பட்ட பல அரிய நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகம் மூலம் பல்வேறு மொழிகளில் **460** புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஓலைச்சுவடிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வலைதளத்தில் மின்–வெளியீடாக காட்சிப்படுத்துதல்**

**3.15** அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள ஓலைச்சுவடிகள் மற்றும் தாட்சுவடிகளின் **2400** கட்டுகள் அதாவது **3,00,000** பக்கங்கள் கணினிமயப்படுத்த தொல்லியல் துறையின் வலைதளத்தில் (www.tnarch.gov.in) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் **13.01.2015** அன்று வெளியிடப்பட்டன. இத்தகவல்கள் உலகில் உள்ள அனைத்து ஆய்வறிஞர்கள் மற்றும் இதர வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. உலகளவில் முதன்முதலாக இத்தகைய ஓலைச்சுவடிகள் வலைதளத்தில் வெளியிடப்படுகின்றன. இதன் காரணமாக எவரேனும் ஒருவர் உலகின் எந்த இடத்திலிருந்தும் இந்த ஓலைச்சுவடிகளை பதிவிறக்கம்

செய்து படித்து, பதிப்பித்து நூலாக்கம் செய்ய இயலும். தொகுப்பாளர்களால் இவ்வரிய ஓலைச்சுவடிகளின் பொருள் கண்டுணரப்பட்டு வெளிக்கொணர்வது மனித குலத்திற்கு பெரிதும் பயன்பாடாக அமையும். இதன் மூலம் நூறு பூக்கள் மலரட்டும்.

## சுவடிகள் வள ஆதார மையம் (MRC)

**3.16** புதுடெல்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகம் கீழ் இயங்கும் ‘‘தேசிய சுவடிக் குழுமம்’’ [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து அதன் விவரங்களை குறுந்தகடுகளில் எண்ணிலக்கம் செய்யும் பணிக்கு, தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் சுவடிகள் வள ஆதார (MRC) மையமாக அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.17** இதுவரை **42,000** சுவடிகள் எண்ணிலக்கம் செய்யப்பட்டு புதுடெல்லியிலுள்ள தேசிய சுவடிக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பண்டைய தமிழர்களின் பண்பாடு, வானவியல் பற்றிய அறிவு போன்ற விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

## 2014–2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் இத்துறையின் வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள்:

**3.18** தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சமஸ்கிருத சுவடிகளை நவீன முறையில் எண்ணிலக்கம் செய்து மின்–வெளியீடாக பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் துறையின் வலைதளத்தில் வெளியிடும் பணி **ரூ.50 இலட்சம்** மதிப்பில் மேற்கொள்ளுதல்.

## தற்போதைய நிலை

தமிழக அரசு இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக அரசாணை (நிலை) எண். 33, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 29.01.2015–யின் மூலம் ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் எல்காட் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் தொடர்பாக, விலைப்புள்ளி ‘‘எல்காட்’’ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

## உலக மரபு வார விழா – நவம்பர் 19 முதல் 25 வரை, 2014

3.19 ஆண்டுதோறும் நவம்பர் திங்கள் 19 முதல் 25 வரை ஒரு வார காலம் இத்துறையால் ‘‘உலக மரபு வார விழா’’ நடத்தப்பட்டுவருகிறது. இவ்வாண்டு ‘‘உலக மரபு வார விழா’’ இராமநாதபுரம் மற்றும் ஆற்காடு தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ– மாணவிகளுக்கு விழிப்புணர்வு விழா நடத்தத் திட்டமிடப்பட்டது.

**3.20 இராமநாதபுரம் –** இராமநாதபுரம் அகழ்வைப்பகத்தில் ராஜா மேல்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் மற்றும் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் பரம்பரை பொறுப்பாட்சியர்கள் ஆகியோர்களின் தலைமையில் **21.1.2015**ல் ஒரு கருத்தரங்கு நிகழ்த்தப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் பள்ளி மாணவ / மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் சுமார் **160** நபர்கள் கலந்துக் கொண்டனர். இந்த கருத்தரங்கில் கலந்துக் கொண்ட மாணவர் சமுதாயத்தினருக்கு இராமநாதபுரம் மாவட்டத்தினை சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள தொல்லியல் நினைவுச் சின்னங்களை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**3.21 ஆற்காடு –** ஆற்காடு அகழ்வைப்பகத்தில் வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத் துறையின் காப்பாட்சியர் அவர்களின் தலைமையில் தொல்லியல் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சியினை சுமார் **600** மாணவ / மாணவிகள் பார்வையிட்டு, தமிழ்நாடு தொல்லியல் சின்னங்களைப்

பற்றியும், கலைப்பொக்கிஷங்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொண்டனர்.

## கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பயிற்சி பயிலரங்கம்

**3.22** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, **2014–2015** ஆம் ஆண்டில் **01.09.2014** முதல் **15.09.2014** முடிய மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அலுவலகத்தில் தொல்லியல் துறை தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்றுள்ள தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்டு ரூ. **5** இலட்சம் மதிப்பில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பயிற்சி பயிலரங்கத்தினை வரலாறு மற்றும் தொல்லியல் தொடர்பான பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்வெட்டு மற்றும் தொல்லியல் ஆராய்ச்சி மாணவர்கள், ஆர்வலர்கள் போன்ற **40** நபர்களுக்கு தமிழ்நாட்டின் கலை, வரலாறு, பண்பாடு, கல்வெட்டு மற்றும் தொல்லியல் தொடர்பான செய்திகள் மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அறியும் வண்ணமும்

விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணமும் இப்பயிலரங்கம் நடத்தப்பட்டது.

## துறை வெளியீடு – புத்தக அரங்கு (BAPASI) தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம்

**3.23** தொல்லியல் துறை தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு இத்துறை வெளியீடுகளை பொது மக்கள் மற்றும் ஆய்வாளர்களின் நன்மைக்காக விற்பனை அரங்கினை அமைத்துள்ளது (09.01.2015 முதல் 21.01.2015 வரை). எதிர்பார்த்தது போல அனைத்து தரப்பட்ட மக்களிடமிருந்து ஆர்வமும் ஆதரவும் பெறப்பட்டு சுமார் 2,700 தொல்லியல் நூல்கள் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ரூ.1,14,000/– வருவாய் அரசிற்கு கிடைக்கப்பட்டுள்ளது. இவ்விற்பனை மூலம் தமிழ்நாட்டின் கலாச்சாரம் பற்றிய சிறப்பு விவரங்கள் அனைவருக்கும் சென்றடைந்துள்ளன என்பது அறியப்படுகிறது.

## 3.24 2014–2015 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய நிகழ்வுகள்

1. இத்துறையின் 14 அகழ்வைப்பகங்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பு (R.O Systems) அமைப்புகள் அமைக்கும் பணிக்கு ரூ. 10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் துறையின் 14 அகழ்வைப்பகங்களில் பொறுத்தப்பட்டு பார்வையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2. தருமபுரி அகழ்வைப்பகம் மற்றும் பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகம் ஆகியவற்றில் காட்சிப்படுத்துல் பணிகளை மேம்படுத்துவதற்கு ரூ. 13 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்படும் அலமாரிகள் டான்சி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுவிட்டன. உள்கட்டமைப்பு பணிகள் பொதுப் பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. 10 அகழ்வைப்பகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் பணி மேற்கொள்ள ரூ.10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, எல்காட் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது கேமராக்கள் பொருத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

4. அகழ்வைப்பகங்களில் கருத்தரங்கு மற்றும் கண்காட்சிகள் நடைபெறும் போது தொல்பொருட்கள் மற்றும் அதனின் விவரங்களை காட்சிப்படுத்துவதற்கு ஏதுவாக காட்சிப்பலகைகள் வாங்குவதற்கு ரூ. 10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து விதமான காட்சிப்பலகைகள் வாங்கப்பட்டு, அனைத்து அகழ்வைப்பகங்களிலும் வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. திட்டம் முடிக்கப்பட்டுவிட்டது.

5. இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் உக்கிரன்கோட்டை ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்வதற்கு ரூ. 6 இலட்சம்

ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ள CABA –வின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

6. தஞ்சாவூர் மண்டல அலுவலகத்தில் பணிபுரியும் நிழற்படமெடுப்பவர் பயன்பாட்டிற்காக ஒரு மடிக்கணினி, ஒரு வீடியோ கேமரா மற்றும் ஒரு டிஜிட்டல் கேமரா வாங்குவதற்கு ரூ. 2 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து கருவிகளையும் வாங்க பணி ஆணைகள் வழங்கப்பட்டு, அனைத்து கருவிகளும் விரைவில் பெறப்படவுள்ளன.
7. சப்த ரிஷி நாடி என்னும் நூலின் ஆறு தொகுதிகளை மறுபதிப்பு செய்தல் (மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி இலக்கனம்) மற்றும் புதியதாக ஆறு தொகுதிகளை பதிப்பித்து வெளியிடும் பணி (துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்மம், மீனம்) பணிகளுக்கு ரூ. 30 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, மறுபதிப்பு பணிகள் முடிவுற்று புத்தகங்கள் வெளியிடப்படும் நிலையில் உள்ளன.

8. தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி – VI, VII ஆகிய இரு கல்வெட்டு நூல்கள், நான்கு மாணவர்களின் ஆய்வேடுகள் மற்றும் 'ஆலம்பரை' அகழாய்வு அறிக்கை ஆகியவற்றை நூலாக வெளிக்கொணர்வதற்கு மொத்தமாக ரூ.7.40 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. விரைவில் அனைத்து நூல்களும் வெளியிடப்பட உள்ளன.

9. அரியலூர் மாவட்டம், ஜெயம்கொண்டம் வட்டம் கங்கைகொண்ட சோழபுரம் அருகிலுள்ள மாளிகைமேடு பகுதியில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடத்தில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ.25 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் பொதுப் பணித் துறையின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நிர்ணயம் செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

10. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள அரிய முக்கியத்துவம் வாய்ந்த 14 நூல்களை மறுபதிப்பு

செய்து வெளியிடுவதற்கு ரூ. 18 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிவுறும் தருவாயில் உள்ளன.

### 3.25 புதிய திட்டம்

**2015–2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamil Nadu Innovation Initiatives) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள திட்டம்**

| திட்ட விவரம் | திட்ட மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி – VIII மற்றும் பத்து மாணவர்களின் ஆய்வேடுகளை வெளியிடுதல் | **11.50** |

**முடிவுரை**

தொல்லியல் என்பது பண்டைய எச்சங்களை மேற்பரப்பு மற்றும் அகழாய்வு வழி அறிதலாகும். இதனால் வரலாறு, பண்பாடு மற்றும் அப்பகுதிகளின் பாரம்பரியத்தினை மறு ஆய்வு செய்ய இயலும். இது மானுடவியல், வரலாறு, கலை வரலாறு, உயர்தகவும்

நிலைபேறும் கொண்ட நூல்கள், மனித இனங்கள் பற்றிய அறிவியல் முறையிலான ஆய்வும் ஒப்பீடும், பூகோளம், புவியியல், மொழியியல், செம்மொழி, பௌதிகம், இரசாயனம், பண்டைய சுற்றுச்சூழல், தொல் உயிரினம் ஆகியவற்றை தற்கால தொழில் நுட்பமான தொலைநுண்ணறியும் இயல் ஆகியவற்றின் மூலம் பழமையான கட்டடப் பகுதிகளையும் அறியவும் இத்தகைய பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாப்பது மூலமும் அவற்றை பல திட்டங்களாக செயல்படுத்துவது மூலமும் பண்டைய தமிழர்களின் சமூக கலாச்சார நிலையினை வெளிக்கொணர முடிகிறது.

**கே.சி.வீரமணி,**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்